செ.வெ.எண்:23 நாள்:12.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

## இந்திய விமானப்படை தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்துதல்

அரியலூர் மாவட்டத்தில் 19.04.2018 அன்று ஏர்மென் தேர்வுமையத்தைச் சேர்ந்த கமான்டிங் அலுவலர் கலந்துக்கொண்டு இந்திய விமானப்படை தேர்வுகள் தொடர்பிலான விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கு வழங்கிட உள்ளார். ஏர்மென் தேர்வு குறித்த பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வதற்கு மேல்நிலைக்கல்வியில் அறிவியல் பாடத்தினை ஒரு பாடமாக தெரிவுசெய்து பயின்ற 17 வயது முதல் 21 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தங்களது பெயர் மற்றும் விவரத்தினை **18.04.2018-க்குள்** அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்வதற்கு பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டை நகலுடன் நேரில் அணுகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**